பெறுநர்

மாண்புமிகு மின் துறை மற்றும் ஆயத் தீர்வை அமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,
சென்னை – 600 002.

மடல் எண் : த.நா.மி.வா.பொ.செ.்.அ.94.்.2013 நாள் : 19.03.13

பேரன்புடையீர்,

பொருள் : தமிழ்நாடு மின் வாரியப் பொறியாளர் கழகம் - உதவிப் பொறியாளர் நேரடித் தேர்வு – தங்களின் கனிவான தலையீடு வேண்டுதல் - தொடர்பாக.

வணக்கம் ,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 600 உதவிப் பொறியாளர்கள் நேரடித் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்டுவார்கள் என்று கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து தேர்வும் நடைபெற்று 2012-ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் மின்னியல் பிரிவில் 450 உதவிப் பொறியாளர்களும் எந்திரவியல் பிரிவில் 100 உதவிப் பொறியாளர்களும் சீரியல் பிரிவில் உருவானது. மின் உற்பத்திப் பணிகள் தொய்வின்றி துரிதமாக நடைபெறவும் மின்வெட்டிலிருந்து விரைவில் விடுபடவும் நவீன தொழிற்நுட்பம் செறிந்த பொறியியலை திறமையுடன் பயின்று – வல்லமை பெற்று பொறியியல் பட்டத்துடன் வெளிவந்துள்ள இத்தகைய புதிய உதவிப் பொறியாளர்கள் பெரிதும் பயன்படுவார்கள். தமிழ் நாட்டின் நலன் கருதியும் மின்வாரியத்தின் நலன் கருதியும் முடிவெடுத்து மின்வாரியத்தில் புதிய இரத்தம் பாய்ச்சிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகம் நெஞ்சார்ந்த நன்றியுடன் போற்றி வணங்குகிறது.

2. பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து விரைவாக களைய வேண்டிய மிகப் பெரியப் பொறுப்பில் உள்ளவர்கள் உதவிப் பொறியாளர்கள் தான். பொறியியல் கல்லூரிகளில் நான்காண்டுகள் முழுநேரப் படிப்பின் மூலம் முறையாகப் பயின்று தேர்ச்சி பெறுபவர்கள் உதவிப் பொறியளர்களாக நேரடித் தேர்வின் மூலம் நியமிக்கப்படுகிறார்கள். பத்தாம் வகுப்பு தேர்ச்சியைத்

தொடர்ந்து மூன்றாண்டுகள் பாலிடெக்னிக்களில் பயின்று தேர்ச்சி பெறும் டிப்ளமோதாரர்கள் இளநிலைப் பொறியாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு நியமிக்கப்படும் உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களிடையே 3:1 என்ற விகிதாச்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-ல் உதயமாவதற்க முன்பிருந்தே தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையின் அங்கமான ‘‘அரசு மின்துறை’’ தோன்றுதொட்டு கடைபிடித்து வந்தது. இன்றைய நிலையில் கூட பொதுப்பணித்துளை நெடுஞ்சாலைத்துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகளிலும் 3:1 என்ற விகிதாச்சாரமே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனினும் மின்சார வாரியம் மட்டும் அனைத்து அரசுத் துறைகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டு வேறுவிதமான விகிதாச்சாரங்களுக்கு துணைபோய்க் கொண்டிருக்கிறது. திறமையான பொறியாளர்கள் பற்றாக்கறையால் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பெரிதும் சிரமப்படுகிறது.

3. உதவிப் பொறியாளர்கள் அல்லது இளநிலைப் பொறியாளர்கள் பணியாற்றிட ஒப்புதலளிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் சுமார் 5819. தற்போது மின்னியல் பிரிவில் சுமார் 400 பணியிடங்கள் காலியாக உள்ளன. இன்றைய நிலையில் 1278 பணியிடங்களில் தான் (2012-ல் புதிதாக பணியமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்களையும் உள்ளடக்கி) பொறியியல் பட்டம் பெற்றவர்கள் உதவிப் பொறியாளர்களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 4141 பணியிடங்களை இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலையிலிருந்து முதல்நிலைக்கு பதவி உயர்வின் மூலமோ அல்லது பகுதி நேரப் படிப்பின் மூலம் பட்டம் பெற்று உள்முகத் தேர்வின் வாயிலாகவோ டிப்ளமோதாரர்கள் அபகரித்து பணியாற்றுகின்றனர். இதன் காரணமாக நவீனத் தொழில் நுட்பத்திறன் முழுமையாக அறிந்த தகுதிபடைத்தவர்கள் எண்ணிக்கையில் குறைந்துவருவதால் அறிவார்ந்த அணுகுமுறை, ஆளுமைத்திறன், செயல்திறன் ஆகியன குறைந்து வாரித்தின் வளர்ச்சியும் வருவாயும் பாதிக்கப்படுவதுடன் மின் நுகர்வோர்களின் நலன்களை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத கவலைதரும் சூழ்நிலையும் நிலவுகிறது. இத்தகைய மோசமான நிலைக்கு இரண்டு விதமான காரணங்கள் முக்கியமானவை. முதற் காரணம் ஆண்டுதோறும் காலியிடங்களைக் கணக்கிட்டு நேரடித்தேர்வு செய்து பணியமர்த்தாமல் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நேரடித்தேர்வு செய்வது தான். இரண்டாவது காரணம். அரசுத் துறைகளில் கடைபிடிக்கப்படும்

பணிவிதிகளுக்கு மாறாக வாரியம் வேறுவிதமான விகிதாச்சாரங்களை கடைபிடிப்பதாகும். 2000-ஆம் ஆண்டில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் செல்லத்தக்கவை அல்ல என்று அறிவித்து தீர்ப்பளித்துள்ள பின்னரும் மேல்முறையீட்டில் வழங்கப்பட்டுள்ள தடையாணையின் போர்வையில் டிப்ளமோதாரர்களின் சூழ்ச்சிக்கு இன்னமும் மின்சார வாரியம் இரையாகி வருவது வேதனை அளிக்கிறது.

4. அதுமட்டுமல்லாமல் அரசத் துறைகளிலிருந்து மேலும் மாறுபட்டு உதவிப் பொறியாளர் பணியிடங்களை நிரப்பிட நேரடித் தேர்வு மற்றும் உள்முகத் தேர்வு என இருவகைகளில் 1:1 என்ற விகிதாச்சாரத்தை மின்சார வாரியம் 1985-ஆம் ஆண்டிலிருந்து கடைபிடித்து வருகிறது. அரசுத் துறைகளில் இத்தகைய விகிதாச்சாரம் கடைபிடிக்கப்படவில்லை. மேலும் 1985-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்த பொறியியல் கல்லூரிகள் 9 மட்டிலே. இன்றைய நிலையில் பல்வேறு நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களைத் தவிர்த்து மட்டிலே சுமார் 550 பொறியில் கல்லூரிகள் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்சி வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 50000 மின்னியல் சார்ந்த பொறியாளர்கள் பொறியியலில் தேர்ச்சி பெற்று வெளிவருகின்றனர். டிப்ளமோதாரர்களுக்கு சாதகமாகவே தமிழ் நாடு மின்சார வாரியம் பல்லாண்டுகாளக தொடர்ந்து செயல்படுவதால் முழுநேரப்படிப்பின் மூலம் பயின்று பொறியியல் பட்டம் பெற்று வெளிவந்து உகந்த – உரிய வேலை தேடி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து சுமார் ஏழெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கம் திறன்படைத்த பொறியியல் வல்லுநர்கள் பாதிக்கப்படுகின்றனர். சட்ட ரீதியா என அவர்களுக்குரிய பங்கு ஏகக்த்தோடு காத்திருக்கம் அவர்களுக்கு கிடைக்கவும் அதன் வாயிலாக வருமானமின்றி வாடும் அத்தகைய ஏழை மக்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கவும் தாயுள்ளம் படைத்த தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் முன்வருவார்கள் என திடமுடன் நம்புகிறோம். அதற்கு என்றும் எங்களை காத்து வரும் எங்கள் போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என வருவாய் ஈட்டுவோரில்லாத ஏழைக் குடும்பங்கள் பல ஏக்கத்தோடு காத்திருக்கின்றன.

5. தற்போது சுமார் 300 உதவிப் பொறியாளர்.∵மின்னயல் பணியிடங்களும் 60 உதவிப் பொறியாளர்.∵எந்திரவியல் பணியிடங்களும் 90 உதவிர்

பொறியாளர்.'.சீரியல் பணியிடங்களும் காலியாக உள்ளன. நேரடித் தேர்வின் மூலம் உதவிப் பொறியாளர்களைத் தேர்வு செய்து மேற்கண்ட காலியிடங்களை நிரப்பிட உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம். 2009, 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் நேரடித் தேர்வின் மூலம் புதிதாக உதவிர் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படவில்லை. 2012-ம் ஆண்டில்தான் தங்களின் முயற்சியால் கனிந்து தமிழக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி புதிய உதவிப் பொறியாளர்கள் வரவு என்ற இனிய சூழ்நிலை மலர்ந்தது.

6.உதவிப் பொறியாளர் நேரடித் தேர்வு ஆண்டுதோறும் முறையாக நிகழ்வதில்லை என்பதை கணக்கில் கொண்டும் நேரடித் தேர்வின் மூலம் தேர்வு செய்யத்தக்க பொறியியல் பட்டதாரிகளின் உரிய பங்கினை உறுதி செய்யவும் செயல்திறன் செறிந்த பொறியியல் பட்டதாரிகளை நேரடித்தேர்வு புதிதாக மின்னியல் பிரிவில் 400 உதவிப் பொறியாளர்களையும், எந்திரவியல் பிரிவில் 50 உதவிர் பொறியாளர்களையும் சீரியல் பிரிவில் 50 உதவிப் பொறியாளர்களையும் பணியமர்த்திட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கழக அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள,

(சீனி.சங்கர நாராயணன்)
பொதுச் செயலர்